1981 மார்ச் 3]

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எப்படியும் முறகனவே அறிவிக்கப்பட்டுவிட்ட இந்த உரிமைப் பிரச்சினையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவதற்கு அடையாளமாக நாங்கள் இப்போது வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் தலைவர் அவர்களே, நழுவுதல் போன்றது எல்லாம் எங்களுக்குத் தெரிந்த கலை அல்ல.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைச சார்ந்தவர்கள் மீது ஒரு அபாண்டமான பழியைச் சுமத்தியதன் காரணமாக, அதை நாங்கள் உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வந்து, நீங்கள் இன்னும் அதை எடுத்துக் கொள்ளாத நிலையில், உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தி நாங்கள் வெளி நடப்புச் செய்கிறோம்.

[காங்கிரஸ் (இ) கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்திரா காங்கிரஸ் கட்சியினர் கவனத்திற்கு அவர்கள் புரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காக நான் சொல்கிறேன்.

It was not necessary that a matter of privilege should be taken the same day on which notice had been given. It could be taken on a subsequent day. The chair in its discretion may take it at any time.

ஆகவே பேரவைவிதிகளின்படிதான் நடைபெற்றிருக்கிறது. பார்லிமெண்டிலே இவையெல்லாம் அனுமதிக்கப்படுவதில்லை.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை நகர கல்லூரி மாணவர்கள் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ப. நெடுமாறன், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் சென்னை நகரிலே குருநானக் கல்லூரி, புதுக் கல்லூரி, ஜெயின் கல்லூரி அம்பேத்தூர் கல்லூரி, ஆகிய கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள், வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவாக, சகல கல்லூரி மாணவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் உருவாகியுள்ள பதட்ட

நிலைக் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களுள் ஒருவர் திரு. ப. நெடுமாறன் மிகச் சுருக்க மாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே சில கல்லூரிகளிலும், ஏற்கனவே இந்த ஒத்தி வைப்பு பிரச்சினையிலே குறிப்பிட்டிருக்கிற கல்லூரிகள் அத்தனை யிலும் பல்வேறு காரணங்களுக்காக, போதுமான ஆஸ்டல் வசதி, மற்ற வசதி இல்லை என்பதற்காக, அதிலும் ஒரு குறிப் பிட்ட கல்லூரியிலே, புதுக்கல்லூரியிலே இருக்கக்கூடிய வார்டன் மீது மிக மோசமான புகார்கள் கூறப்பட்டும், இந்த வகையிலே இந்த நான்கு கல்லூரிகளிலே மாணவர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். ஊர்வலம் வந்த மாணவர்கள் 94 பேரை போலீசார் சிறை பிடித்துள்ளனர்.

[முற்பகல் 10·50]

ஆக மொத்தத்தில் அனைத்துக் கல்லூரிகளிலும் இன்றைக்கு ஒரு பதட்டமான நிலைமை நிலவியிருக்கிறது. குறிப்பிட்ட நான்கு கல்லூரிகளிலேயும் உள்ள நிர்வாகச் சீர்கேடுகளின் காரண மாக இந்த நிலை சென்னை நகரத்திலே ஏற்பட்டிருப்பது விரும்பத் தக்கதல்ல. தனியார் கல்லூரிகளிலே இருக்கக்கூடிய நிர்வாகச் சீர்கேடுகளைக் களைவதற்கும் தனியார் கல்லூரி நிர்வாகங் களை ஒழுங்குபடுத்துவதற்கும் அரசு தலையிட வேண்டுமென்று நான் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே தனியார் கல்லூரிகளிலே என்ன என்ன சீர்கேடுகள் இருக்கின்றன என்று தெரிந்து தான் அரசு அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதைப் பயன்படுத்தி இந்த நான்கு கல்லூரிகளிலே உள்ள நிர்வாகச் சீர்கேடுகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவும், மாணவர்களின் குறைகளைத் தீர்க்கவும் உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும், அதற்கு ஏற்ற வகையிலே இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தப்பட்ட விஷயமாக..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 54-இல் ஒருவர் கொடுத்து இருந்தார். 55-இல் கொடுக்கப்பட்டது எடுத்துக் கொள்ளப் படுகிறது. 54-இல் கொடுத்ததை 55-இல் சேர்த்துக்கொள்ள முடியாது.

திரு. சோ. அழகர்சாமி : நான் அதைக் கேட்கவில்லை, சேர்க்க வேண்டுமென்று சொல்லவில்லை. 54-வது விதியின் கீழ் 2 தினங்களுக்கு முன்னால் ஒரு உறுப்பினர் பெயரால் கொடுக்கப் பட்டது. அப்போது அது அவசர முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்று கூறி ரிஜக்ட் செய்யப்பட்டு இருக்கிறது, அது சரிதானா? அதே பொருள்பற்றி திரும்ப ஒத்திவைப்புத் தீர்மானம் இப்போது கொண்டுவர அனுமதிக்கப்பட்டிருக்கிறதே..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசர முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்று எழுதிக் கொடுக்கவில்லை.

திரு. எம். ஆறுமுகம் : 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27 ஆம் நாள், 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ஆம் நாள் ஆகிய நாட்களில் டாக்டர் அம்பேத்கார் கல்லூரி, புதுக் கல்லூரிகளில் வேலைநிறுத்தம் நடைபெறுவதாக நான் கொடுத்து இருக்கிறேன்......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 2 கல்லூரிகளிலே போராட்டம் ஆரம்பிக்கப் போகிறார்கள் என்று கொடுத்திருக்கிறீர்கள். ஆரம்பிக்கப் போகிறார்கள் என்ற தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட முடியாது. ஆனால் அது நடந்த பிறகு தீர்மானம் வந்திருக்கிறது, அது எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதைப்பற்றி நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே சென்னை ஜெயின் கல்லூரி மாணவர்களில் சிலர் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதாலும் வன்முறையில் ஈடுபட்டு கல்லூரிக்கு அதிக அளவில் பொருட்சேதம் ஏற்படுத்தியதாலும் மூன்று மாணவர்கள் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். இதன் தொடர்பாக ஜெயின் கல்லூரி யூனியன் தலைவரும் மற்றும் ஜெயின் மாலைக் கல்லூரி மாணவர் தலைவரும் செயலாளரும் கல்லூரித் துணைக் கல்வி இயக்குநர் அவர்களைச் சந்தித்து வெளியேற்றப்பட்ட மாணவர்கள் மறுபடியும் அதே கல்லூரியில் பகல் கல்லூரி அல்லது மாலைக் கல்லூரியில் சேர்க்கப் பட வேண்டுமென்று கோரியுள்ளார். சுமூகமான முறையில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை ஒரு சில ஆசிரியர்கள் அதிகாரிகளைத் தடுக்கின்றனர் என்றும், அவர்கள் தங்களுடைய பணிகளை சரிவரச் செய்வதில்லை என்றும் துணைக் கல்வி இயக்குநரிடம் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இப்பிரச்சினைக்கு வெளியேற்றப்பட்ட மூன்று மாணவர்கள் மறுபடியும் அதே கல்லூரியில் சேர்த்துக் கொள்வதைத் தவிர வேறு எந்த முடிவையும் அவர்கள் ஏற்பதாக இல்லை என்றும் கூறியுள்ளார். இதன் பிறகு 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ஆம் நாள் உதவி இயக்குநர் அவர்கள் ஜெயின் கல்லூரி முதல்வரை அழைத்து மாணவர்களின் முடிவைப்பற்றி விளக்கியுள்ளார்கள், அதற்கு

[திரு செ. அரங்கநாயகம்] 1981 மார்ச் 3

கல்லூரி முதல்வர், மாணவர்கள் நீண்ட நாட்களாக மிகவும் ஒழுங்கீனமாக நடந்துகொண்டிருப்பதாலும், கல்லூரிக்குப் பெருமளவில் பொருள் சேதம் ஏற்படுத்தியிருப்பதாலும் அவர் களை மறுபடியும் கல்லூரியில் சேர்ப்பது உசிதமல்ல என்றும்அது ஏற்றுக்கொள்ள இயலாத ஒன்று என்றும் கூறி உள்ளார். பின்னர் சென்னையில் உள்ள எட்டுக் கல்லூரி மாணவர் தலைவர்களும் செயலாளர்களும் ஜெயின் கல்லூரி தலைவருடன் சேர்ந்து துணைக் கல்வி இயக்குநர் அவர்களைச் சந்தித்து இப்பிரச்சனை அனைத்துக் கல்லூரிகளின் பிரச்சினையாக கருதப்படுவதால் அவர்களை (வெளியேற்றப்பட்ட மூன்று மாணவர்களை) கல்லூரியில் திரும்ப எடுத்துக் கொள்வதற்குக் குறைந்த எந்த முடிவும் அவர்களுக்குத் திருப்தி அளிக்காது என்று கூறியுள்ளார். ஜெயின் கல்லூரி மாணவர்களுக்கு ஆதரவாக அனைத்துக் கல்லூரி மாணவர்களும் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27ஆம் நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யப்போவதாகவும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண மார்ச் மாதம் 2 ஆம் நாள் வரை காலக் கெடு அளித்துள்ளதாகவும் அதன் பிறகு மேற் கொண்டு நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் மாணவர்கள் எச்சரிக்கை விடுத்துச் சென்றுள்ளனர் என்று துணைக் கல்வி இயக்குநர் கூறியுள்ளார். மாணவர்கள் விளைவித்த பொருட் சேதத்தைப்பற்றி கல்லூரி முதல்வர் காவல் துறைக்கும் புகார் செய்துள்ளார். காவல் துறையினர் சேதங்களைப் பார்வையிட்ட பின்புதான், மாணவர்கள் உடைத்துச் சேதப்படுத்திய பொருட் களை அப்புறப்படுத்தப் போவதாகவும் கல்லூரி முதல்வர் கூறியுள்ளார், வன்முறையிலும், நாசவேலையிலும் ஈடுபட்ட மாணவர்களைத் திரும்ப எடுத்துக் கொள்வது விரும்பத்தக்க தல்ல என அவர் கூறியுள்ளார். மேலும், கல்லூரித் துணை இயக்குநர் விலக்கப்பட்ட மூன்று மாணவர்களுக்கு வேறு கல்லூரி எதிலாவது பகல் அல்லது மாலை வகுப்புகளில் சேர்க்க முயற்சிப்பதாகக் கூறியிருக்கிறார்.

மேலும், கல்லூரித் துணை இயக்குநர் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23 ஆம் தேதி கல்லூரிக்குச் வந்து பார்வையிட்டு கல்லூரி முதல்வருடனும், மற்றும் மேல்நிலை தலைவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். அவ்வமயம் மாணவர்த் தலைவர்கள் ஒருவரும் வரவில்லையெனக் கூறியிருக்கிறார். அவர் கீழ்க்கண்டவாறு அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.

(1) கல்லூரி அதிகாரிகள் மாணவர்கள்மேல் எடுத்த நடவடிக்கை சரியானதே.

(2) வெளியேற்றப்பட்ட மாணவர்களைத் திரும்பவும் கல்லூரியில் சேர்த்துக் கொண்டால் ஆசிரியர்களும், ஆசிரிய ரல்லாத ஊழியர்களும் அதை எதிர்ப்பார்கள்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1981 மார்ச் 3] [திரு செ. அரங்கநாயகம்]

(3) வெளியேற்றப்பட்ட மாணவர்களிடம் அரசு பச்சாதாபம் காட்ட விரும்பினால், அவர்களை வேறு கல்லூரிகளில் சேர்க்க முயற்சிக்கலாம்.

இது அந்தத் துணைக் கல்வி இயக்குநர் அவர்கள் பரிந்துரை செய்ததுதான். ஆனால் இதற்குப் பிறகு ஒருவரை எடுத்துக் கொள்வதாக அந்தத் கல்லூரியினர் சொன்னதாக மாணவர்கள் என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மேற்கொண்டு அந்தத் கல்லூரி முதல்வரோடு தொடர்பு கொள்ளும்படி செயலாளரை நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

அம்பேத்கார் கல்லூரி : அம்பேத்கார் கலைக் கல்லூரி மாணவர்கள் தங்கள் கல்லூரிக்குச் சுற்றுச் சுவர் இல்லாததால் கல்லூரிக்கு அருகில் குடியிருப்பவர்கள் இக் கல்லூரிப் பரப்பினை ஒரு பொது வழியாக உபயோகப்படுத்துவதுடன், கழிவிடமாகவும், சலவைத் தொழிலாளர்கள் இக்கல்லூரியின் தாழ்வான நிலப்பரப்பில் தேங்கியுள்ள நீரில் துணிகளை துவைக்கவும், அவற்றை அதற்கு அருகிலேயே உலர வைக்கவும் உபயோகப்படுத்துகின்றனர் என்றும், மேலும் இக் கல்லூரியின் நிலப்பரப்பின் ஓரத்தில் அனுமதியின்றி குடிசைகளைப் போட்டுக்கொண்டு இக்கல்லூரி நிலத்தை ஆக்கிரமிக்கவும் செய்கின்றனர். இதனால் இக்கல்லூரியின் சுற்றுப்புற சுகாதார நிலை பாதிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்து கல்லூரிக்குச் சுற்றுச் சுவர் கட்டித்தர வேண்டும் என்று கோரியுள்ளார்கள். தவிர, விளையாட்டு மைதானம், நூலகம், கல்லூரி முகப்பில் பெயர் வளைவு, சைக்கிள் கொட்டகை, சிற்றுண்டிச்சாலை, குடிநீர் வசதி, கல்லூரியின் கட்டிடத்தை விரிவுப் படுத்துதல் மேலும் சில வகுப்புகளை ஏற்படுத்துதல், கல்லூரிக்கருகில் பஸ்நிலையம் அமைத்தல், அண்ணா நகர், விவேகானந்தா இல்லம், சைதாப்பேட்டை போன்ற இடங்களுக்கு நேரடி பஸ் வசதி போன்ற வசதிகள் வேண்டுமென்று கோரியுள்ளார்கள்.

கல்லூரிக்குச் சுற்று சுவர் கட்டுவது: அந்தப் பகுதியிலுள்ள மக்கள் உட்புகுந்து ஆக்ரமிப்பதையும், அசுத்தப்படுத்துவதையும் தடுக்க கல்லூரிக்குச் சுற்றுச் சுவர் கட்டுவது மிக அவசியமென்று கல்லூரித் துணை இயக்குநர் தெரிவித்துள்ளார். ஆனால், சுற்றுச் சுவர் கட்டுவதற்கு பெருஞ் செலவாகும் என்பதால், கல்லூரிக்கு முன்நுழைவாயில் வளைவு, நுழைவுப் பாலம் ஆகியவை அமைக்கலாம் என்றும், மீதி பக்கங்களுக்குப் பலமான முள் கம்பி வேலி போடலாம் என்றும், அதற்கான மதிப்பீட்டைப் பொதுப்பணித் துறையிடமிருந்து பெற்று உடனடியாக அரசுக்கு அனுப்பி வைப்பதாகவும் கூறியிருக்கிறார்.

கூடுதல் கட்டிடங்கள் வேண்டுமென்று உள்ள கோரிக்கை மீது, மாணவர்களின் குறைந்த எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு பார்க்கும்போது தற்போதைக்குத் தேவையில்லை என்று தோன்றுகிறது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[திரு செ. அரங்கநாயகம்] [1981 மார்ச் 3

1981–82 ஆம் ஆண்டு புதிதாக ஆரம்பிக்கப்படும் கணக்கு வகுப்புகளுக்கு மூன்று வகுப்பு அறைகளும், அரசாங்கத்திற்குப் பயன்படும்படி ஒரு பெரிய அறையும் தேவைப்படும். இந்தக் கோரிக்கை அடுத்த ஆண்டில் கவனிக்கப்படும்.

புதிய பாட வகுப்புகள் .—ஒவ்வொரு கல்லூரிக்கு ஒரே ஒரு புதிய பாடம் ஆரம்பிக்க அனுமதியளிக்க சென்னைப் பல்கலைக் கழகம் தீர்மானித்துள்ளது. இதன்படி பி.எஸ்.சி. கணக்கு வகுப்புகள் ஆரம்பிக்கத்தக்க திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. நூலகம், சோதனைக்கூடம், விலங்கியல் துறைக்கான மியூசியம் தற்போதுள்ள வசதிகளை மேம்படுத்த கூடுதல் நிதி 1981–82-ல் ஒதுக்கப்படும்.

இக்கல்லூரிக்குக் குடிநீர் வசதி, சைக்கிள் கொட்டகை, சிற்றுண்டிசாலை போன்ற வசதிகளைச் செய்து தருவதற்கு விவரமான அறிக்கை ஒன்றைக் கல்லூரி முதல்வரிடம், கல்லூரி, கல்வி இயக்குநர் கேட்டுள்ளார்.

1981–82 ஆம் ஆண்டில் மேலும் கூடுதல் தொகை ஒதுக்கி ஆய்வகம், நூலகம் முதலியவற்றில் சில வசதிகள் செய்துதரத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கூடுதலான பஸ் வசதிகளுக்காகப் பல்லவன் போக்குவரத்துக் கழக அதிகாரிகளைக் கேட்குமாறு கல்லூரி முதல்வர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். மாணவர்களின் எண்ணிக்கை (சுமார் 270) குறைவாக இருப்பதால் சிற்றுண்டிச் சாலைக்குத் தனிக் கட்டிடம் தேவையில்லை என்றும் சிற்றுண்டிச் சாலையை ஒப்பந்தத்தில் (Cont. act) ஏற்று நடத்த எவரும் முன்வர மாட்டார்கள் என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்திருக் கிறார்.

மாலை நேரக் கல்லூரி, என்.ஸி.ஸி. முதலியவைகள் ஆரம் பிப்பது பற்றிப் பின்னர் கவனிக்கலாம்.

மாணவர்களின் நியாயமான கோரிக்கைகள் மீது மெத்தன மாயிராது துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென் பது மேற்கண்டவை மூலம் தெளிவாகும்.

குருநானக் கல்லூரி :—குருநானக் கல்லூரி மாணவர்கள் கல்லூரி நிர்வாகம் தங்களுக்குத் தேவையான அடிப்படை வசதி களான, கான்டீன், குடிநீர், மின்விசிறி முதலியவைகள் செய்து தரவில்லை என்றும், மேலும் முதலுதவி, மருத்துவ வசதி விளை யாட்டு வசதி இவைகள் இல்லையென்றும் முறையிட்டு 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2-ந் தேதி முதல் உண்ணாவிரதப் போராட் டம் ஆரம்பிக்கயிருப்பதாக அறிவித்தனர். கல்லூரி துணை இயக்கு நர் கல்லூரி நிர்வாகம் மற்றும் மாணவர்களுடன் பேச்சு வார்த்தை கள் நடத்தியதன் பலனால் கல்லூரி நிர்வாகம் மாணவர்களின்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

குறைகளைப்பரிசீலனை செய்து, மறுபடியும் பேச்சுவார்த்தைகள் தொடர்வதற்கு இசைந்துள்ளது. அதன்பேரில் மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் **2-ந்** தேதியிலிருந்து ஒரு வாரம் ஒத்திவைக்க இசைந்துள்ளார்கள். மாணவர் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக இவ்வாரம் கல்லூரிக் கல்வித் துணை இயக்குநர் கல்லூரி நிர்வாகத்தினருடனும், மாணவர்களுடனும், மறுமுறையும் பேச்சுவார்த்தை நடத்தயிருக்கிறார்.

[முற்பகல் 11-00]

புதுக் கல்லூரி : கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் போராட்டம் காரணமாக மூடப்பட்டுள்ளது. துணைக் கல்லூரி கல்வி இயக்குநர், கல்லூரி முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்கள், முதலியவர்களுடன் பேசியபின் ஒரு அறிக்கை தந்துள்ளார். அதன் சுருக்கம் கீழே தரப்படுகிறது.

விடுதி மாணவர்கள், கல்லூரி நிர்வாகக் குழுவின் தலைவரான திரு. அகமத் பாட்சா ஒழுக்கமற்றவர் என்றும், அவர் பதவியிலிருந்து விலக வேண்டுமென்றும் போராட்டம் நடத்தி காவல் துறையினரிடம் இதுபற்றி புகார் கொடுத்துள்ளனர். அது காவல் துறையின் விசாரணையில் உள்ளது.

தனிச் சிறப்புக்கட்டண நிதி துறையின் விதிகளின்படி கல்லூரி முதல்வரால் நிர்வகிக்கப்பட வேண்டும். ஆனால் இது கல்லூரி நிர்வாகம் சிறுபான்மையினரின் நலனைப் பாதுகாப்பதாகக் கூறி இதைத் தங்கள் பொறுப்பிலேயே வைத்துக்கொண்டுள்ளது. இக்குறை நிவர்த்திக்கபட வேண்டிய ஒன்றாகும்.

கழிப்பிட வசதி, குளியல் வசதிக்கென புதிதாக ஒரு கட்டிடம் சகல வசதிகளுடனும் கட்டி முடிக்கப்பட்டிருந்தும், மாணவர்களின் உபயோகத்திற்கு திறந்து விடப்படவில்லை. இது நிவர்த்திக்கப்பட வேண்டிய குறை.

நூலகத்திற்கு ஒரு சிறந்த நான்குமாடிக்கட்டிடம், மின் தூக்கி இணைப்புடன் கட்டப்பட்டுள்ளது. முதுநிலைப் பட்டப் படிப்புத்துறை நூலகமும் இதில் அடங்கும். இந்தக் கட்டிடமும் மாணவர்கள்/ஆசிரியர்கள் உபயோகத்திற்குத் திறந்து விடப்படவில்லை. நூலகத்திற்குப் புத்தகங்கள், மேஜை, நாற்காலிகள் போட சுமார் மூன்று இலட்சம் செலவாகும். இதை நிர்வாகம் செலவு செய்யத் தயங்குகிறது. இது தீர்க்கப்பட வேண்டிய குறை.

ஆசிரியர்களின் பணப் பதிவேடு எழுதப்பட்ட பின்னரும், நிர்வாகக் குழுவின் உறுப்பினரிடம் சிக்கிக் கொண்டு இருப்பதாகவும், அவைகளை முதல்வரிடம் தர அவர் மறுப்பதாயும் தெரி

கிறது. அதனால் பணிப் பதிவேடுகள் நாளதுவரையில் எழுதப் படவில்லை. மேற்கண்ட பொருள்கள் பற்றி கல்லூரி நிர்வாகக் குழுவுடன் கல்லூரி கல்வித் துறை உடனடியாக விவாதிக்க இருக் கிறது. ஆகவே, இதுபோன்ற பிரச்னைகள் 4 கல்லூரிகளிலும் 4 விதமாக இருந்து கொண்டிருக்கின்றன. இப்படிப் பல வித பிரச்னைகளிலும் ஏறக்குறைய அன்றாட நிர்வாகச் சம்பந்த மான பிரச்னைகளாக இருப்பதால், அவற்றைப் பேசித் தீர்ப்ப தற்கான சீரிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டிருப்ப தன் காரணமாக, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இது குறித்து, விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை யென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச் சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

4. கவன ஈர்ப்பு.

கலசப்பாக்கம் தொகுதியில் கால்நடைகள் கோமாரி நோயினால் பாதிக்கப்பெற்றுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே,

''கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள துரிஞ்சாபுரம் ஒன்றி யம் பெரிய கிளாம்பாடி மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் மாடு களுக்கு கோமாரி எனும் நோய் ஏற்பட்டு பல கால்நடைகள் இறந்திருப்பது குறித்து''

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகி றேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் தலை வர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை அவை முன் வைக்கிறேன் :—

அறிக்கை.

வட ஆற்காடு மாவட்டத்தில், உசாம்பாடி, நார்த்தம்பூண்டி பெரிய கிளாம்பாடி முதலிய கிராமங்களில் கோமாரி நோயின் பாதிப்பு 25–1–1981 முதல் 11–2–1981 வரை ஏற்பட்டது. நோய் பற்றிய தகவல் மல்லவாடி கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவருக்கு 11–2–1981 அன்று கிடைத்த பின்பு அன்றே சிகிச்சை ஆரம்பிக்கப் பட்டது. மேற்குறித்த இடங்களில் பாதிக்கப்பட்ட கால்நடை கள் 37. அவற்றில் 4 கன்றுகள் இறந்து விட்டன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS